**DEPOSITION OF WITNESSES**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI**

**C.C. No: 23/2018**

**Deposition of Witnesses for PW1**

| | | |
|---|---|---|
| Name | : | திரு.ரமேஷ் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Section 142 of Bharatiya Sakshya Adhiniyam, 2023, on the day of 13.08.2025

**எதிரிகள் ஆஜர். எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. இரு தரப்பு வழக்கறிஞர்களும் ஆஜர்.**

**முதல் விசாரணை:-**

நான் தற்போது திண்டுக்கல் மாவட்டம் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்ற தடுப்பு பிரிவில் கூடுதல் காவல் கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2014ம் ஆண்டு ராமநாதபுரம் மாவட்டம Q குற்ற புலனாய்வு துறையில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது 28.11.2014ம் ஆண்டு Q குற்ற புலனாய்வு துறை காவல் துணை கண்காணிப்பாளரின் உத்தரவு படி 23.00 மணிக்கு நிலையத்தில் இருந்து புறப்பட்டு தனுஷ்கோடி கடற்கரை பகுதியில் போதை பொருள் கடத்தல் சம்பந்தமாக கிடைத்த தகவலின் படி ராமேஸ்வரம் குரூப் கிராம நிர்வாக அலுவலர் வீரசிகாமணி மற்றும் கிராம உதவியாளர் ஆகியோர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு போதை பொருள் சம்பந்தமாக ரோந்து நடவடிக்கைக்கு சாட்சிகளாக இருக்க அழைத்தன் பேரில் ராமேஸ்வரம் பேருந்து நிலையம் அருகில் இருந்தவர்களை போலீஸ் பாட்டிகளான ஆய்வாளர் கென்னடி, சார்பு ஆய்வாளர் சந்தனமாரி, போஸ், கணேசமூர்த்தி மற்றும் சிறப்பு சார்பு ஆய்வாளர் கோவிந்தராஜ், பெரியசாமி, த.கா.தில்லை ராஜன், த.கா.முருகேசன், த.கா.சுதாகர், த.கா.சுந்தர மூர்த்தி, மு.நி.கா. ராஜன் ஆகியோர்களுடன் காவல்

வாகனத்தில் முகுந்தராயர் சத்திரத்தில் இருந்து தனுஷ்கோடி செல்லும் வழியில் ரோந்து செய்தபோது கோரி என்ற இடத்தில் உள்ள சர்ச் அருகில் உள்ள சந்தேகத்திற்கு இடமாக நின்றுக்கொண்டிருந்த நபர்களை பிடித்து விசாரித்ததில் அவர்கள் தங்களது பெயர் பாக்கியராஜ், த.பெ. செல்லகனி, மாரியம்மன்கோவில் தெரு, நடராஜபுரம். 2. சரவணன், த/பெ.செல்லகனி, மாரியம்மன்கோவில் தெரு, நடராஜபுரம். 3. பாலமுருகன்,த/பெ.ஆறுமுகம், பாலம், தனுஷ்கோடி, 4. மாரி ராஜ என்ற சேர்வை,ட த.பெ.உமயசுந்தரம் என்ற சக்கர பாண்டி, பாலம், தனுஷ்கோடி, என்று கூறியவர்களை அவர் வைத்திருந்த 9 டிராவல் பேக்குகளில ் எதிரி 1 பாக்கியராஜ் ஆஜர் செய்த 3 டிரவல் போக்குகளில் 30 பொட்டலங்கள் கஞ்சா மற்றும் ஜிபிஎஸ் கருவி ஆகியவற்றை ஆஜர் செய்தார். அவற்றை சாட்சிகள் விஏஓ வீரசிகாமணி., உதவியாளர் கணேசன் ஆகியோர் முன்னிலையில் அத்தாட்சியில் 29.11.2014ம் ஆண்டு அதிகாலை 4 மணிக்கு கைப்பற்றினேன். அந்த அத்தாட்சி **அ.த.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரி 2 சரவணன் ஆஜர்செய்த 2 டிராவல் போக்குகளில் 20 பொட்டலங்கள் கஞ்சா ஆஜர் செய்தார். அவற்றை சாட்சிகள் விஏஓ வீரசிகாமணி., உதவியாளர் கணேசன் ஆகியோர் முன்னிலையில் அதிகாலை 04.20 மணிக்கு அத்தாட்சியில் கைப்பற்றினேன். அந்த அந்த அத்தாட்சி **அ.த.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரி 3 பாலமுருகன் என்பவர் ஆஜர்செய்த 2 டிராவல் போக்குகளில் 22 பொட்டலங்கள் எடுத்து கஞ்சா ஆஜர் செய்தார். அவற்றை சாட்சிகள் விஏஓ வீரசிகாமணி., உதவியாளர் கணேசன் ஆகியோர் முன்னிலையில் அதிகாலை 04.40 மணிக்கு அத்தாட்சியில் கைப்பற்றினேன். அந்த அந்த அத்தாட்சி **அ.த.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரி 4 மாரிராஜ் என்ற சேர்வை என்பவர் ஆஜர்செய்த 2 டிராவல் போக்குகளில் 24 பொட்டலங்கள் கஞ்சா மற்றும் செல்போன் ஆஜர் செய்தார். அவற்றை சாட்சிகள் விஏஓ வீரசிகாமணி., உதவியாளர் கணேசன் ஆகியோர் முன்னிலையில் அதிகாலை 05.00 மணிக்கு அத்தாட்சியில் கைப்பற்றினேன். அந்த அந்த அத்தாட்சி **அ.த.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மொத்தமாக 9 டிராவல் பேக்குகளில் 96 பொட்டலங்களில் 2 கிலோ வீதம் சுமார் 192 கிலோ கஞ்சா இருந்தது. மேலும் எதிரிகளை விசாரித்தபோது மேற்படி கஞ்சாவை மதுரையிலிருந்து கார் மூலம் ஜெயா, க/பெ.தங்கமணி, அண்ணா நகர், மதுரை மற்றும் அவரது மகன் பாண்டியராஜன் ஆகியோர் 1வது எதிரி பாக்கியராஜ்க்கு கொண்டு வந்து கொடுத்ததை எதிரி பாக்கியராஜ் என்பவர் தனக்கு ஜெயா என்பவர்

ரூ.20 ஆயிரம் கொடுக்கப்பதாக சொன்னதன் பேரில் ஆசைப்பட்டு ஒத்தப்பட்டி, வடக்கு தரவையிலிருந்து கீர்த்தனா என்று எழுதப்பட்ட வத்தை மூலம் கோரி என்ற இடத்தில் உள்ள சர்ச் அருகில் வைத்து எதரிகள் சரவணன், பாலமுருகன், மாரிராஜ் என்ற சேர்வை உதவியுடன் கஞ்சாவை இலங்கைக்கு கடத்துவது தெரியவந்தது. மேற்படி 4 எதிரிகளையும் அத்தாட்சியில் கைப்பற்றப்பட்ட சொத்துக்களையும் தனுஷ்கோடி சார்பு ஆய்வாளரிடம் நடவடிக்கை எடுக்க தனி அறிக்கையுடன் ஆஜர் செய்தேன். தனி அறிக்கை **அ.த.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மதுரையிலிருந்து கஞ்சாவை கார் மூலம் சட்ட விரோதமாக கடத்தி வந்து இலங்கைக்கு கடத்தல் செய்ய முயன்ற ஜெயா மற்றும் அவரது மகன் பாண்டி ராஜன் மற்றும் கடத்தலுக்கு உதவியாக இருந்த கீர்த்தனா என்ற வத்தை உரிமையாளர் மீதும் நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொண்டேன். இது சம்பந்தமாக கோவில் வட்ட ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

இல்லை.

Taken down by me in open court
read over to the witness and
admitted by him to be correct.

Addl. District Judge/ Presiding Officer,
Spl. Court for EC/NDPS Act case,
Pudukkottai.

**DEPOSITION OF WITNESSES**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI**

**C.C. No: 23/2018**

**Deposition of Witnesses for PW2**

| | | |
|---|---|---|
| Name | : | திரு.கென்னடி |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Section 142 of Bharatiya Sakshya Adhiniyam, 2023, on the day of 13.08.2025

**எதிரிகள் ஆஜர். எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. இரு தரப்பு வழக்கறிஞர்களும் ஆஜர்.**

<u>முதல் விசாரணை:-</u>

நான் தற்போது தர்மபுரி CID பிரிவில் ஆய்வாளராக பணிபுரிந்து 2019ல் பணி ஓய்வு பெற்றேன். தற்போது ஈரோடு டவுனில் குடியிருந்து வருகிறேன். நான் ராமநாதபுரம் மாவட்டம் Q பிரிவு குற்ற புலனாய்வு துறையில் ஆய்வாளராக பணிபுரிந்து வந்தபோது 28.11.2014ம் ஆண்டு Q குற்ற புலனாய்வு துறை காவல் துணை கண்காணிப்பாளரின் உத்தரவு படி 23.00 மணிக்கு நிலையத்தில் இருந்து புறப்பட்டு தனுஷ்கோடி கடற்கரை பகுதியில் போதை பொருள் கடத்தல் சம்பந்தமாக கிடைத்த தகவலின் படி ராமேஸ்வரம் குரூப் கிராம நிர்வாக அலுவலர் வீரசிகாமணி மற்றும் கிராம உதவியாளர் ஆகியோர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு போதை பொருள் சம்பந்தமாக ரோந்து நடவடிக்கைக்கு சாட்சிகளாக இருக்க அழைத்தன் பேரில் ராமேஸ்வரம் பேருந்து நிலையம் அருகில் இருந்தவர்களை போலீஸ் பாட்டிகளான ஆய்வாளர் ரமேஷ் தலைமையில், நான், சார்பு ஆய்வாளர் சந்தனமாரி, போஸ், கணேசமூர்த்தி மற்றும் சிறப்பு சார்பு ஆய்வாளர் கோவிந்தராஜ், பெரியசாமி, த.கா.தில்லை ராஜன், த.கா.முருகேசன், த.கா.சுதாகர், த.கா.சுந்தர மூர்த்தி, மு.நி.கா.ராஜன் ஆகியோர்களுடன் காவல் வாகனத்தில் முகுந்தராயர்

சத்திரத்தில் இருந்து தனுஷ்கோடி செல்லும் வழியில் ரோந்து செய்தபோது கோரி என்ற இடத்தில் உள்ள சர்ச் அருகில் உள்ள சந்தேகத்திற்கு இடமாக நின்றுக்கொண்டிருந்த நபர்களை பிடித்து விசாரித்ததில் அவர்கள் தங்களது பெயர் பாக்கியராஜ், த.பெ. செல்லகனி, மாரியம்மன்கோவில் தெரு, நடராஜபுரம். 2. சரவணன், த/பெ.செல்லகனி, மாரியம்மன்கோவில் தெரு, நடராஜபுரம். 3. பாலமுருகன்,த/பெ.ஆறுமுகம், பாலம், தனுஷ்கோடி, 4. மாரி ராஜ என்ற சேர்வை,ட த.பெ.உமயசுந்தரம் என்ற சக்கர பாண்டி, பாலம், தனுஷ்கோடி, என்று கூறியவர்களை அவர் வைத்திருந்த 9 டிராவல் பேக்குகளில` எதிரி 1 பாக்கியராஜ் ஆஜர் செய்த 3 டிரவல் போக்குகளில் 30 பொட்டலங்கள் கஞ்சா மற்றும் ஜிபிஎஸ் கருவி ஆகியவற்றை ஆஜர் செய்தார். அவற்றை சாட்சிகள் விஏஓ வீரசிகாமணி., உதவியாளர் கணேசன் ஆகியோர் முன்னிலையில் அத்தாட்சியில் 29.11.2014ம் ஆண்டு அதிகாலை 4 மணிக்கு ஆய்வாளர் ரமேஷ் கைப்பற்றினார். எதிரி 2 சரவணன் ஆஜர்செய்த 2 டிராவல் போக்குகளில் 20 பொட்டலங்கள் கஞ்சா ஆஜர் செய்தார். அவற்றை சாட்சிகள் விஏஓ வீரசிகாமணி., உதவியாளர் கணேசன் ஆகியோர் முன்னிலையில் அதிகாலை 04.20 மணிக்கு அத்தாட்சியில் ஆய்வாளர் ரமேஷ் கைப்பற்றினார். எதிரி 3 பாலமுருகன் என்பவர் ஆஜர்செய்த 2 டிராவல் போக்குகளில் 22 பொட்டலங்கள் எடுத்து கஞ்சா ஆஜர் செய்தார். அவற்றை சாட்சிகள் விஏஓ வீரசிகாமணி., உதவியாளர் கணேசன் ஆகியோர் முன்னிலையில் அதிகாலை 04.40 மணிக்கு அத்தாட்சியில் ஆய்வாளர் ரமேஷ் கைப்பற்றினார். எதிரி 4 மாரிராஜ் என்ற சேர்வை என்பவர் ஆஜர்செய்த 2 டிராவல் போக்குகளில் 24 பொட்டலங்கள் கஞ்சா மற்றும் செல்போன் ஆஜர் செய்தார். அவற்றை சாட்சிகள் விஏஓ வீரசிகாமணி., உதவியாளர் கணேசன் ஆகியோர் முன்னிலையில் அதிகாலை 05.00 மணிக்கு அத்தாட்சியில் ஆய்வாளர் ரமேஷ் கைப்பற்றினார். மொத்தமாக 9 டிராவல் பேக்குகளில் 96 பொட்டலங்களில் 2 கிலோ வீதம் சுமார் 192 கிலோ கஞ்சா இருந்தது. மேலும் எதிரிகளை ஆய்வாளர் ரமேஷ் விசாரித்தபோது மேற்படி கஞ்சாவை மதுரையிலிருந்து கார் மூலம் ஜெயா, க/பெ.தங்கமணி, அண்ணா நகர், மதுரை மற்றும் அவரது மகன் பாண்டியராஜன் ஆகியோர் 1வது எதிரி பாக்கியராஜ்க்கு கொண்டு வந்து கொடுத்ததை எதிரி பாக்கியராஜ் என்பவர் தனக்கு ஜெயா என்பவர் ரூ.20 ஆயிரம் கொடுக்கப்பதாக சொன்னதன் பேரில் ஆசைப்பட்டு ஒத்தப்பட்டி, வடக்கு தரவையிலிருந்து கீர்த்தனா என்று எழுதப்பட்ட வத்தை மூலம் கோரி என்ற இடத்தில் உள்ள சர்ச் அருகில் வைத்து எதரிகள் சரவணன்,

பாலமுருகன், மாரிராஜ் என்ற சேர்வை உதவியுடன் கஞ்சாவை இலங்கைக்கு கடத்துவது தெரியவந்தது. மேற்படி 4 எதிரிகளையும் அத்தாட்சியில் கைப்பற்றப்பட்ட சொத்துக்களையும் தனுஷ்கோடி சார்பு ஆய்வாளரிடம் நடவடிக்கை எடுக்க ஆய்வாளர் ரமேஷ் தனி அறிக்கையுடன் ஆஜர் செய்தார். மதுரையிலிருந்து கஞ்சாவை கார் மூலம் சட்ட விரோதமாக கடத்தி வந்து இலங்கைக்கு கடத்தல் செய்ய முயன்ற ஜெயா மற்றும் அவரது மகன் பாண்டி ராஜன் மற்றும் கடத்தலுக்கு உதவியாக இருந்த கீர்த்தனா என்ற வத்தை உரிமையாளர் மீதும் நடவடிக்கை எடுக்க ஆய்வாளர் ரமேஷ் கேட்டுக்கொண்டார். நான் அப்போது அவருக்கு உதவியாக இருந்தேன். நடந்த விவரங்கள் சம்பந்தமாக கோவில் வட்ட ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

இல்லை.

Taken down by me in open court
read over to the witness and
admitted by him to be correct.

Addl. District Judge/ Presiding Officer,
Spl. Court for EC/NDPS Act case,
Pudukkottai.